Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 02 (18-09-1991) புதன்கிழமை ஓசை: 212

## அன்னை பூபதி பொது அறிவு போட்டிப் பரிசளிப்பு விழா

அன்னைபூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டித் தேர்வுப் பரிசளிப்புவிழா (1991) நாளை மறுதினம் 20-09-1991 மாலை 3 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது. 12-04-1991 அன்று நடைபெற்ற இப்போட்டியில் 16.000 இற்கு மேற்பட்ட வடதமிழீழ மாணவர்கள் பங்கேற்றனர் 3000 இற்கு மேற்பட்ட வடமாணவர்கள் பாடசாலை ரீதியாக சித்தியடைந்ததற்கான சான்றிதழ்களைப் பெறுகின்றனர். கொத்தணி ரீ) யாகவும், மாவட்ட ரீதியாகவும் முதலாம் இடத்தைப்பெற்ற மேற்பிரிவு, கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் (4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா பாராளுமன்றம் இன்று கலைக்கப்படும்?

## குற்றப்பிரேரணையைதடுக்கபிரேமாமுயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தம் மீதான குற்றப் பிரேரணை மனு மீதான விவாதத்தை தடுக்கும நோக்குடன் பாராளுமனறத்தைக் கலைத்து உடனடிப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடக்கூடும என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் கருதுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைப் பிரேமதாசா மீதான அதிருப்தியாளர்களும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர். இன்றுமாலைநடைபெறும் அரசாங்க பாராளுமன்றக்குழுக்கூட்டத்தைஅடுத்து பாராளுமன்றத்தை கலைக்கும் உத்தரவில் பிரேமதாசா கையொப்பமிடக்கூடும் என்றும் அதிருப்தியாளர் தெரிவித்துள்ளனர். மேலும் சோதிடர் கணித நல்ல நேரத்தில் ஜனாதிபதி

அத்துடன் ஐ.தே. கட்சியின் தேர்தல் டிக்கெட் தமக்கு மீளவும இடைக்குமோ என்று அஞ்சும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அரசியல் எதிர்காலம் அஸ்தமித்து விடுமென்பதனால் பாராளுமன்றம் கலைக்சப்படுவதை விருப்பவில்லை என தெரியவருகிறது.

### பாராளுமன்றை கலைப்பது எனது உரிமையாகும்

– சிறிலங்கா ஜனாதிபதி

## வீரவணக்கம்

### லோரன்ஸ் சுரேன்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் போது நேற்று செவ்வாய்க்கிழமை லோரன்ஸ் (முருகேசு தஜேந்திரன் மாவடி, புத்தூர்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார் மேலும் கடந்த 15 ஆம் திகதி மேற்படி யுத்

# ராணுவம்மீதுகடும்தாக்கு; 8 படை பலி; 30 படுகாயம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினமிரவு கடும்மோதல் ஒன்று இடம்பெற்றது. இராணுவத்தினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திய புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இருபகுதியினருக்கும் குறிப்பிடத்தக்க உயிரிழப்பு ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படை விமானங்களும். உலங்கு வானூர்திகளும தொடர்ந்தும் தாக்குதலை மேற்கொண்டு வரும் வேளையில் கடுமையான எறிகணைத் தாக்குதலும் இடம்பெற்று வருகிறது.

அதேவேளை மணலாற்றுப் பகுதியில் நடைபெறும் மோதல்களில் நேற்றுமட்டும் குறைந்தது எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும், மேலும் சுமார் முப்பது (4ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் அஞ்சலிக்காக இன்று மாவீரர்கள் புகழுடல்கள்

(யாழ்ப்பாணம்)

மணலாறு காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணத்தை தழுவிக்கொண்ட மாவீரர்களின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இப்புகழுடல்கள் வலிகாமம் பிரிவில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையிலும, தென்மராட்சிப் பிரிவில் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையிலும், வடமராட்சிப் பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும், பின்னர் இப் புகழுடல்கள் மாவீரர்களின் சொந்த இடங்களிலுள்ள மாவீரர் துயிலும் மயானங்களில் புதைக்கப்படும்.

எல்லைப் புறத்தே சமர்க்களத்தில் எதிரிகளைப் பந்தாடி வீரமரணமடைந்த இம் மாவீரர்களுக்கு வீரவணக்கம் தெரிவிக்கும் மரியாதை நிகழ்வுகளில் மக்கள் அனைவரையும் பங்கேற்று மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

றத்தை கலைக்கும் உத்தரவில் பிரேமதாசா கையொப்பமிடக்கூடும் என்றும் அதிருப்தியாளர் தெரிவித்துள்ளனர். மேலும் சோதிடர் கணித்த நல்ல நேரத்தில் ஜனாதிபதி பிரேமதாசா பாராளுமன்றத்தை கலைக்கும் பிரகடனத்தில் கையெழுத்திடுவார் என்று லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்,

## பாராளுமன்றை கலைப்பது எனது உரிமையாகும்

**- சிறிலங்கா ஜனாதிபதி**

(கொழும்பு)

தனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு மனு காலாவதி ஆகிவிட்டதெனசிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

சபாநாயகர் எம். எச் முகமட்டுக்கு ஜனாதிபதி பிரேம

(4ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகரின் அறிவிப்பிற்கு ஜனாதிபதி செயலகம் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா மீதான குற்றப் பிரேரணை மனு முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்ற சபாநாயகரின் அறிவிப்பிற்கு ஜனாதிபதி செயலகம் கண்டனம் தெரிவித்துள்ளது. 1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினோராம் திகதி வரையில் ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரும் பிரேரணை எதுவும் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் அல்லது நிகழ்ச்சிப்பதிவில் சேர்க்கப்படவில்லை என்றும் ஜனாதிபதிச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் சபாநாயகர் உத்தியோக ரீதியான முறையில் - உறுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்வாதிகளால் சோதிடர் வீடு முற்றுகை

(கொழும்பு)

கொழும்பு புறநகர்ப் பகுதியில் பிரபல்யமான சோதிடர் ஒருவரைச் சாதாரண மக்கள் அணுக முடியாது உள்ளதாம் அவரின் வீட்டுக்கு முன்னால் பென்ஸ் மற்றும் பி.எம். டபிள்யூ கார்கள் வரிசையில் நிற்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# எவரின் ஆலோசனையும் சபாநாயகருக்குதேவையில்லை

**- பிரேமச்சந்திரா**

(கொழும்பு)

எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பது குறித்து சபாநாயகருக்கு எவரும் ஆலோசனை வழங்க வேண்டிய அவசியமில்லை. அவருக்கு அவருடைய வேலை தெரியும். அதனால்தான் சபாநாயகர் எம். எச். முகமட்டை பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்கள் ஒன்றியத்தின் தலைவராகத் தெரிவு செய்துள்ளார்கள் என்று முன்னாள் அமைச்சரும் பிரேமதாசா அதிருப்தியாளருமான ஜி.எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிறர் முகத்தில் திரவம் வீசும் பழக்கம் எமக்கில்லை

**— பிரேமதாசா**

(உடகம)

தன்னை அழிக்க முற்பட்டிருக்கும் திரிவுவாதிகளைத் தான் அம்பலப்படுத்தப்போவதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வெள்ளியன்று தெரிவித்தார்.

மேலும் அவர் பின்னிற்கு நின்று குத்தும் பழக்கம் எம்மிடம் இல்லை. திரவத்தை பிறர் முகத்தில் வீசும் பழக்கமும் எம்மிடம் இல்லை என்றார் அவர்.

உடகம மாதிரிக் கிராமத்தில் கூட்டமொன்றில் பேசிய

(4ஆம் பக்கம் பார்க்க)

நேற்று செவ்வாய்க்கிழமை லோரன்ஸ் (முருகேசு தஜேந்திரன் மாவடி, புத்தூர்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார் மேலும் கடந்த 15 ஆம் திகதி மேற்படி யுத்தத்தில் காயமடைந்த சுரேன் (சந்திரசேகரம் ஜெயக்குமார் ஐயனார் கோவிலடி, சுன்னாகம்) என்றபோராளி நேற்று வீரமரணம் அடைந்துள்ளார்

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்

## மாவீரருக்கு மக்கள் அஞ்சலி

(முள்ளியவளை)

மணலாறு மாவட்டத்தில் இடம் பெற்ற நேரடி மோதலில் கடந்த 13 ஆம் திகதி வீரமரணமடைந்த நிறைஞ்சன்- புதுக்குடியிருப்பு, பாலு-மட்டக்களப்பு, வசி-ஒட்டுசுட்டான், ரகுநாத் - கொக்குத்தொடுவாய், வினோதரன் - கொக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## அறுவடைக்கு இராணுவ பாதுகாப்பு

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் காலபோக அறுவடையில் ஈடுபட்டுள்ள சிங்கள விவசாயிகளுக்கு சிறிலங்கா ராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்,

மட்டக்களப்பு பொலநறுவை எல்லையில் உள்ள வயல்களில் நெல் அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கே பாதுகாப்புக் கருதி இராணுவத்தினர் 'சென்றி' நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## இன்று தபால் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்மாவட்டத் தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுக்காலை பருத்தித்

(4ஆம் பக்கம் பார்க்க)

வீரர்களின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இப்புகழுடல்கள் வலிகாமம் பிரிவில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் அமைக்கப்

மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும், பின்னர் இப் புகழுடல்கள் மாவீரர்

மாவீரர்களுக்கு வீரவணக்கம் தெரிவிக்கும் மரியாதை நிகழ்வுகளில் மக்கள் அனைவரையும் பங்கேற்று மரியாதை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# கண்முடித்தனமான எறிகணைவீச்சு மக்கள் பெருமளவில் இடர்பெயர்வு

(வவுனியா)

சென்ற் டொலர்பண்ணைப் பகுதி இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலினால்நெடுங்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானகுடும்பங்கள் உடைமைகளை விட்டு அகதிகளாக வெளியேறி வருகின்றனர்

மேற்படி முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்கள் 18மைல் தூரத்திலுள்ள நெடுங்கேணிப் பகுதியில் வந்து வீழ்ந்து வெடிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பட்டிக்குடியிருப்பு, ஒதியமலை, கற்குளம், வெடிவைத்தகல், கோவில்புளியங்குளம், பெரியகுளம், கிரிகட்டான் போன்ற கிராமங்களைச் சேர்ந்த இக்குடும்பங்கள் குளவிசுட்டான், மாறாஇலுப்பை, ஊஞ்சல்கட்டி போன்ற இடங்களுக்கும் சிலர் மாங்குளம் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை மணலாறு பகுதியில் இடம்பெறும் விமானக் குண்டுவீச்சு மற்றும் ஹெலி தாக்குதல்கள் நெடுங்கேணிக்கு இரவ பகலாக கேட்பதாகவும் இவை மிக அண்மையில நடப்பதுபோல் நெடுங்கேணி அதிர்வதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

**பாக்குநீரிணையில்**

## அதிவேக நவீன படகுகள் இந்தியா பயன்படுத்தும்

(பம்பாய்)

பாக்கு நீரிணையில் நவீன அதிவேக படகுகளையும், ரோந்து விமானங்களையும் பயன்படுத்துவதற்கு இந்தியா திட்டமிடடுள்ளதாகத் தெரிய வருகிறது.

பம்பாயில் செய்தியாளர் மத்தியில் பேசிய கடற்படை உயர் அதிகாரி ஒருவர் பாக்கு நீரிணைப்பகுதியில் பயன்படுத்துவதற்கென நவீன ஆயுதங்களுடன் கருவிகளுடனும் கூடிய ஆறு அதிவேக ரோந்துப்படகுகள் கட்டப்படுவதாகவும், அவை விரைவில் கடலோர காவற்படையில்சேர்க்கப்படும் எனவும் தெரிவித்தார்

மேலும் ஆறுரோந்து விமானங்களும்சேர்க்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார், மேலும் அவர் பேசுகையில் இந்தியக் கடலோர காவற்படைப் பிரிவு பலப்படுத்தப்பட்டு வருவதா

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை குண்டுவெடிப்பில் 11 பொதுமக்கள் காயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் உள்ள பொதுமக்கள் பெரியளவில் கூடும் கட்டமொன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் பொதுமக்களில் மூன்று பெண்கள் உட்பட மொத்தம் பதினொரு பேர் காயமடைந்தனர் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பொதுமக்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் நோக்கில் வைக்கப்பட்ட இக்குண்டு ஒரு நேரக் கணிப்புக் குண்டென தெரியவருகிறது குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் நேரக்கணிப்புக் கருவி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கட்டடமும் சேதமடைந்தது.

இக்குண்டு வயரால் பின்னப்பட்ட 'பாக்' ஒன்றில் வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது. பிரிந்து போன நிலையில் மேற்படி பாக்கிலிருந்து உடைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில்காயமடைந்தோர் விபரம் வருமாறு.

(4ஆம் பக்கம் பார்க்க)

"மக்கள் அனைவரும எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேணடும இதற்கு வேறுயாருடைய தயவையும் எதிர்பார்க்கக கூடாது"

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(B/3127)

## வரி விளம்பரம்

### உடன்தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் ஆண்களுக்கு ஆடைகளை வெட்டித் தைக்கக் கூடியவர்கள் உடன் தேவை நல்ல சம்பளம் வழங்கப்படும் உங்கள் பெயர் முகவரியுடன் தொடர்பு: விளம்பர இல: 113 C/O ஈழநாதம் 31, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (R/1757)

### தவறிவிட்டது

16-09-91 அன்று கொழும்பில் இருந்து வரும்பொழுது கேரதீவு இறங்குதுறையில் உடுப்புகள், பிளாஸ்ரிக் கோப்பைகள், நூல்கட்டைகள் முதலிய பொருட்கள் அடங்கிய 'பேபி சோப் பெட்டி' ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கரியதாஸ், மதுரநாயகி உரும்பராய் வடக்கு உரும்பராய், (சென். மைக்கல் கோயிலடி) என்னும் இடத்தில் ஒப்படைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (R/1760)

### ஜீவிதா

தொழில் நுட்பக் கூடம்

ரீ. வி, டெக், ரேடியோ, மணிக்கூடு, கிரைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும். (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம். சந்தி ஓட்டுமடம். யாழ்ப்பாணம். (B/3094)

### சிப்பாய் காலை இழந்தார்

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் உள்ள இரத்தக்கண்டி முகாமில் இருந்து ரோந்து சென்ற இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கியுள்ளார்கள். மிதிவெடியில் சிக்கிய இராணுவத்தினரில் ஒருவர் தனது காலை இழந்துள்ளார்.

### கலந்துரையாடல்

சகல திரைப்பட அரங்கு, வீடியோ பட அரங்கு உரிமையாளர்களையும் முகாமையாளர்களையும் நாளை 1991 09.19 (வியாழன்) காலை 10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

★ குறித்த நேரத்தில் கலந்துரையாடல் ஆரம்பமாகும்.

நிதர்சனம்,
இருநெல்வேலி. (B-3141)

பொறுப்பாளர்.

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

G.A.Q
Ist in Com.

யாழ். பல்கலைக் கழக விரிவுரைகள்


ஆரம்பம்:- 21 - 09 - 1991

பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரைகள்

ஆரம்பம்:- 05 - 10 - 1991

விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



திருமதி
மண்டலேஸ்வரி சரவணமுத்து

தோற்றம் 05-05-1918

மறைவு 21-08-1991

அன்பும் ஆதரவும் தந்து பண்புடனும் பாசத்துடனும் எங்களெல்லோரையும் அரவணைத்து ஆறுதலும் தேறுதலும் கூறி வளர்த்த எங்கள் குலவிளக்கே! தாயே! உங்கள் ஆன்மா அமரத்துவம் அடைந்து இறப்பு பிறப்பெனும் வாதனை அற்று இருக்க இறை அருள் பாலிக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல சிவ பெருமானை வேண்டி வழுத்திப் பிரார்த்திப்பதல்லால் நாம் செய்யக்கூடிய கைமாறு வேறுமுளதோ? கரண

## வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்!

துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K. K. S. Road,
JAFFNA.

(B-3137)

## அரசாங்க எழுதுனர் சேவை

பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 24 - 09 - 91 2.30 மணி

Tuesdays
Wednesdays | 2.30 - 5.00

விண்ணப்பப்பத்திரங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

(Spoken English வகுப்புகளும்நடைபெறுகின்றன)

School of Business Administration

16, 3rd Cross Street,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
Jaffna. (B-3139)

Administration

16, 3rd Cross Street,

(OLR தேவாலய மேற்குப் பக்கம்)

Jaffna. (B-3139)

ஆரம்பம்:- 05 - 10 - 1991

விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

# புதிய உயர் கல்லூரி

NEW COLLEGE OF HIGH STUDIES

ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(B/3135)


அன்பும் ஆதரவும் தந்து பண்புடனும் பாசத்துடனும் எங்களெல்லோரையும் அரவணைத்து ஆறுதலும் தேறுதலும் கூறி வளர்த்த எங்கள் குலவிளக்கே! தாயே! உங்கள் ஆன்மா அமரத்துவம் அடைந்து இறப்பு பிறப்பெனும் வாதனை அற்று இருக்க இறை அருள் பாலிக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல சிவபெருமானை வேண்டி, வழுத்திப் பிரார்த்திப்பதல்லால் நாம் செய்யக்கூடிய கைமாறு வேறுமுளதோ? கரணவாய் ஆதீன சைவக்குருக்கள் திரு. கு. சிவா அவர்களால் வெள்ளிக்கிழமை (20-9-91) நடக்க இருக்கும் அந்தியேட்டி சபிண்டீகரண அபரக்கிரியைகளில் பங்குபற்றி மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் அன்புடன் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

சுபம்.

'குகவாசா' உடுப்பிட்டி றோட், இங்ஙனம்

வதிரி, கரவெட்டி. (R-1761) குடும்பத்தினர்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 15-04-1972

தாயக மண்ணில் 04 08-1991

### வீரவேங்கை நிசாந்தன்

(இளையதம்பி பிரேமசிறி)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

கரனை நீ களம் சென்றாய்
கடமையை ஏற்று
தோளை உயர்த்தினாய் - எம்
துன்பம் துடைத்திட
நாளை மலரும் காலையில்
நமக்கென நாடிருக்கும்
வேளை வரும் வரையில்
வீரனே உன்பாதையில் பயணம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்

இளையதம்பி குடும்பத்தினர்

89, நாயன்மார் வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம். (B/3142)

தமிழகத்தில் புலிகள்

## வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கக் கோரிக்கை

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியின் போதிருந்த விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றியும், இப்போதுள்ள நிலைமை பற்றியும் வெள்ளை அறிக்கையொன்றை சட்டப் பேரவையில்சமர்ப்பிக்க வேண்டுமென்று தமிழக அரசை பாரதிய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதுரையில் செய்தியாளர் மத்தியில் பேசிய பாரதிய ஜனதாக் கட்சியின் அகில இந்தியத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி இதனைக் கேட்டுள்ளார்.

தற்போது கூட தமிழக காவல் துறையின் புலனாய்வில் குறை இருப்பதாகவும், விடுதலைப் புலிகள் பின்பற்றி வரும் திட்டத்தை விசேட புலனாய்வுத்துறை இதைக்கவனிக்கத் தவறி விட்டது என்றும் கிருஷ்ணமூர்த்தி குறை கூறினார்,

இத்திட்டத்தில் தமிழகத்திற்குள் பல்வேறு விடுதலைப் புலிக்குழுக்கள் பல்வேறு நோக்கங்களுக்காகசெயற்பட்டு வருவதாகவும், இதுபற்றி விடுதலைப் புலிகள் தலைமையைத் தவிர ஒரு குழுவின் பணி மற்றக் குழுக்களுக்குத் தெரியாது என்றும், இது பற்றி உயர் அளவில் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கிருஷ்ணமூர்த்தி கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் உள்ள பிரிவினை சக்திகள் விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு அளித்து வருகின்றனர் என்றும், தமிழகத்தில் உள்ள விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வருமாறு தலைமையகம் அறிவித்துள்ளதாகக் கூறப்படுவது செய்தி திசை திருப்பும் ஒரு யுத்தியாகும் என்றும், மத்திய, மாநில அரசுகளுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தோற்றுவிப்பதே நோக்கமாகும் என்றும் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்

## விமான மலசல கூடத்தில் 26லட். ரூபா தங்கம்

சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த விமான மொன்றில் மலசல கூடத்திற்குள் 25 லட்சம் ரூபா பெறுமதியான தங்கப் பாளங்கள் கண்டுபிடிக்கப் பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கப்பகுதிக்கு கிடைத்த செய்தி ஒன்றினை அடுத்தே இந்த இடத்தை சோதனையிட்டபோது தங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கு இந்து மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு பழைய மாணவர் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி அதிபர் கேட்டுள்ளார். (43)

## சங்கானையில் அம்புலன்ஸ் சேவை

சங்கானை அரசினர் மருத்துவ மனையிலிருந்து நேற்று முன்தினம் முதல் அம்புலன்ஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது.

தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனை கடந்த முதலாம் திகதி முதல் மூடப்பட்டதைத் தொடர்ந்து அதன் சில பிரிவுகள் சங்கானை மருத்துவ மனைக்கு மாற்றப் பட்டது தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து அதன் அம்புலன்ஸ் வாகனமும் சங்கானைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அங்கிருந்து அவசர நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவர இது பயன்படுத்தப்படும் என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 09 - 18

1985ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

நிசன் (சி.ஜெகதீஸ்வரன் - புதூர், மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

லெப்.வன்னியபு (உருத்திர கணேசன் ஸ்ரீரங்கன் - புலோலி)

மருதித்துறை - புற்றளைப் பகுதியில் இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் முற்றுகையின் போது உயிரிழந்த இரு தமிழ் இளைஞர்கள்

1990ஆம் ஆண்டு காங்கேசன்துறை முகாம் இராணுவத்தினருடனான மோதலின் போது எறிகணைத் தாக்குதலினால் வீரமரணமெய்திய

சுலக்சன் (தியாகராசா யோகராசா - வத்திராயன் வடக்கு, தாளையடி)

நெல்லியடியில் சிறிலங்காப் படை விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலின் போது உயிரிழந்த இளம் தமிழ்ப் பெண்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3136)

### சிந்தனைக்கு

சுதந்திரமாய் இருக்க உறுதி கொண்ட மனிதன்மீது அடிமைத் தளையைப் பூட்டுவதை விட நிலையான மலையை அடியோடு பெயர்த்து அப்பால் எறிவது கூட எளிதானது.

— ராபர்ட்ஜே


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 18-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5903
[illegible]


# தேசிய போராட்டங்களுக்கு எதிராக 'சார்க்'

விடுதலைப்புலிகளுக்கு எதிரான கூட்டு இராணுவ நடவடிக்கை, ஒத்துழைப்பு என்பனபற்றி இந்திய சிறிலங்கா அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள், புலனாய்வுத்துறை அதிகாரிகள் பேசிவருகின்றனர். இந்த ஒத்துழைப்பு நடவடிக்கைகள் மறைமுகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் எர்வர்டோ பெலரோ அண்மையில் ராஜ்ய சபாவில் பேசும்போது உறுதிப்படுத்தினார். அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் செய்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இத்திட்டத்தை முன்மொழிந்ததாகவும் இத்திட்டத்தின் விரிவான அம்சங்களை சிறிலங்கா அரசாங்கம் கொடுத்ததும் இந்திய அரசு ஆராயும் எனவும் அவர் தெரிவித்தார். தற்பொழுது இத்திட்டம் கொழும்பில் தயாராக இருப்பதாகவும் தெரிகிறது.

அதேவேளை இந்தியாவிலும் குறிப்பாக தென் மாநிலங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்திய மாநில அரசாங்கங்களும் மத்திய அரசாங்கமும் முடுக்கிவிட்டுள்ளன. ராஜீவ்காந்தியின் கொலையுடன் விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி இந்நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தாலும் அதன் நோக்கு வேறு மாதிரியானதாகும். தனியாக ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்டதல்ல.

இன்று சர்வதேச ரீதியாக நிகழ்ந்துவரும் மாற்றங்கள் இந்தியாவிற்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. உலகில் தேசிய இனங்களின் விடுதலையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையும் இந்தியாவால் ஜீரணிக்க முடியாத ஒரு விவகாரமாகவே இருந்து வருகின்றது. இந்திய ஒருமைப்பாடு என்ற போர்வையில் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கிவரும் இந்தியாவின் எதிர்கால ஆட்சியாளர்களின் முன் கேள்விக்குறியாக எழுந்து நிற்கின்றது.

## விடுதலைப் புலிகள் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் பிரிவுரீதியாக நடைபெறும் தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவுநாள்

# நிகழ்ச்சி நிரல்

### வலிகாமம்

| | | |
|---|---|---|
| 21-09-91 | பி.ப. 7-00 மணி | குருநகர் ச. ச. நிலையம் |
| 22-09-91 | ,, ,, | மருதனாமடம் சந்தை மைதானம் |
| 23-09-91 | ,, ,, | புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி |
| 24-09-91 | ,, ,, | அராலி புங்கங்குளம் மைதானம் |
| 25-09-91 | ,, ,, | ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டரங்கு |
| 26-09-91 | ,, ,, | நல்லூர் ஆலய முன்றலில் மாபெரும் நினைவஞ்சலிக் கூட்டம் |

### தீவகம்

| | | |
|---|---|---|
| 21-09-91 | பி. ப. 6-30 மணி | புங்குடுதீவு - காளிகோவிலடி |
| 22-09-91 | ,, ,, | புங்குடுதீவு - மத்திய கனிஷ்டார் விளையாட்டு மைதானம் |
| 23-09-91 | ,, ,, | புங்குடுதீவு - மத்தி ஊரதீவு மைதானம் |
| 24-09-91 | ,, ,, | புங்குடுதீவு - கிழக்கு அம்பலவாணர் மடம் |
| 25-09-91 | ,, ,, | புங்குடுதீவு - வீராமலை இராஜேஸ்வரி வித்தியாலயம் |

### வடமராட்சி

| | | |
|---|---|---|
| 21-09-91 | மு. ப. 10-00 | செம்பியன்பற்று |
| ,, | பி. ப 08-00 | மாமுனை மாவீரர் தூபியடி |
| 22-09-91 | பி. ப. 02-00 | நாகர்கோயில் வடக்கு முருகன் ஆலயவீதி |
| ,, | பி. ப. 03-00 | அம்பன் பிள்ளையார் கோவில் |
| 23-09-91 | பி. ப. 02 00 | பொற்பதி |
| ,, | பி. ப. 03-00 | மணற்காடு தேவாலயம் |
| ,, | பி. ப. 07-00 | நடுக்குடத்தனை |
| 24-09-91 | பி. ப. 07-00 | கரவெட்டி மூத்த விநாயகர் கோவில் |
| ,, | பி. ப. 08-00 | பருத்தித்துறை பழைய பஸ் நிலையம் |
| 25-09-91 | பி. ப. 07-00 | தெல்லியடி மாவீரர் கலையரங்கம் |

### தென்மராட்சி

| | | |
|---|---|---|
| 21-09-91 | பி. ப. 7-00 | மிருசுவில் கூசன் இராமநாதன் புகாலித்தியாலயம் |
| 22-09-91 | ,, 8-00 | சாவகச்சேரி சிவன் கோவிலடி |
| 23-09-91 | ,, 7-00 | மந்துவில் சிறிகாந்தன் ச. ச. நிலையம் |
| 24-09-91 | ,, 8-00 | பளை சிற்றாரவ மைதானம் |
| 25-09-91 | ,, 8-00 | நாகர்தழி மகாவித்தியாலயம் |

தென்மராட்சியில் நடைபெறும் சகல கூட்டங்களிலும், திலீபன் வாழ்க்கை வரலாறுபற்றிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

# அஸாம் மாநிலத்திற்கு இராணுவம் அழைப்பு

(டில்லி)

அஸாம் மாநிலத்தில் அல்பா தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து பல்வேறு இடங்களில் அந்த மாநிலத்தில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல தீவிரவாதிகளையும் அவர்களின் தலைவர்களையும் தாம் பிடித்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. பல மலைப்பிரதேசங்களில் தாம் தீவிரவாதிகளின் மறைவிடங்களை சுற்றிவளைத்ததாகவும் இராணுவம் கூறியுள்ளது.

# ஐ. நா. அனுமதிக்காவிடில் துருப்புக்கள் அனுப்பப்படும்

## ஈராக்கிற்கு அமெரி. எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கில் ஐ. நா. சபையின் மேற்பார்வைக் குழுக்களைபார்வையிட ஜனாதிபதி சதாம் ஹுசைன் அனுமதிக்காவிடில் அமெரிக்கத் துருப்புக்களை மீண்டும் ஈராக்கிற்கு அனுப்பப் போவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகரான பிரன்ஸ் கௌகா தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் இதனைத் தெரிவித்தார்.

## சென்னை தி. மு. க.

# ஊர்வலத்தில் வன்முறை விசாரணை நடைபெறுகிறது

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகம் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடத்திய ஊர்வலத்தின் போது நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து வழக்குகள் பதியப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் சபை முதல்வர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

சென்னி நேரம் முடிந்ததுடன் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் மற்றும் ஐந்து உறுப்பினர்களும் இது பற்றிக் கொண்டு வந்த ஒத்திவைப்

ஊர்வலம் சென்ற பாதையில் பல இடங்களில் ஊர்வலத்தில் சென்றவர்கள் வன்முறை கல்லெறிச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும், இதனால் இந்திரா காங்கிரஸ் அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் சொத்துக்கள் சேதமடைந்ததாகவும் அவர் கூறினார். பல கார்கள் சேதப்படுத்தப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊர்வலத்துக்குப் பிறகு கூட்டம் நடக்கஏற்பாடாகவிருந்த இடத்தில் வன்முறை ஏற்படக்கூடிய சூழல் ஏற்படக் கூடியதைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஆறுமுறை பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியதாகவும் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

யுள்ளன. உலகில் தேசிய இனங்களின் விடுதலையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையும் இந்தியாவால் ஜீரணிக்க முடியாத ஒரு விவகாரமாகவே இருந்து வருகின்றது. இந்திய ஒருமைப்பாடு என்ற போர்வையில் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கிவரும் இந்தியாவின் எதிர்காலம் ஆட்சியாளர்களின் முன் கேள்விக்குறியாக எழுந்து நிற்கின்றது.

இதேவேளை வல்லரசுகள் ஏனைய நாடுகளின் இறைமைகளையும் மீறி 'உள்விவகாரங்களில்' தலையிடுவதும் தமக்கு ஏதுவாக சர்வதேச ரீதியான அழுத்தங்களைக் கொடுப்பதும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தமது நோக்குகள் நிறைவேறுவதற்காக இதுவரை செல்லப் பிள்ளையாக அமெரிக்காவால் போஷிக்கப்பட்டு வந்த இஸ்ரேலை அமெரிக்க நிதி உதவியை வெட்டப்போவதாக மிரட்டுவதும் ஆப்கான் கெரில்லாக்களுக்கான ஆயுத உதவியை நிறுத்துவதும், சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானுக்கும் கியூபாவிற்கும் உதவிகளை நிறுத்துவதும் போன்ற நடவடிக்கைகள் பெருங் குழப்பத்தை இந்தியாவிற்கு ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் கிழக்கு ஐரோப்பா, சோவியத்யூனியன், மத்திய கிழக்கு என்பனவற்றில் தமது முழுக் கவனத்தையும் தற்பொழுது செலுத்திவரும் மேற்குலகத்தின் பார்வை தென் ஆசியாவை நோக்கித் திரும்ப முன்னர் தென்னாசியாவில் ஒரு ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கு இந்தியா விரும்பி நிற்கின்றது. அதனை சிறிலங்காவும் புரிந்துகொண்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகஇந்தியா புலிகளை அழித்தொழிக்கலில் அக்கறை கொண்டுள்ளது இன்று உலகில் நடைபெறும் தேசிய இன விடுதலை முதன்மையான போராட்டங்களில் தமிழீழப் போராட்டமும் ஒன்றாகும். இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திவரும் விடுதலைப் புலிகள் தற்பொழுது தென்னாசியாவின் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களுக்கு முன் மாதிரியாகவும், வழிகாட்டிகளாகவும் உள்ளனர். இந்நிலையில், இவர்களை அழித்தொழித்தல் என்பது தென்னாசியப் போராட்டங்களையே அழித்தொழிப்பதற்குச் சமனென இந்தியா கருதுகின்றது.

இந்நிலையில் தான் முன்னர் சிறிலங்கா எவ்வளவோ வேண்டிக்கொண்ட போதும் பாக்கு நீரிணையில் கூட்டுரோந்து நடவடிக்கைக்கு மறுப்புத் தெரிவித்துவந்த இந்தியா தற்பொழுது அதற்கு மேலாகவும் சென்று சிறிலங்கா அரசாங்கத்திற்கு இராணுவ உதவிகளையும், ஆலோசனைகளையும் புரிய முன்வந்துள்ளது.

இன்று உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தனியாக இந்தியா சிறிலங்காவை மட்டும் தேசிய இனங்களின் போராட்டத்திற்கெதிராக இணைத்துவிடும் என்பதல்ல முரண்பாடுகளை மறந்து சகல தென்னாசிய அரசுகளும் விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராக இணைத்து விடக் கூடும். இந்நிலையில் ஆட்சிசெய்யும் பெரும்பான்மையினங்கள் இணைந்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை இதற்கு 'சார்க்' அமைப்பையும் இவர்கள் பயன்படுத்தலாம். ஆனால் இவர்கள் என்னதான் முயற்சிகளை மேற்கொண்டு வரினும் தென்னாசியாவில் தேசிய இனப்போராட்டங்கள் வளர்வதும், அவை வெற்றி பெறுவதும் இன்றைய எல்லைகள் மாற்றமடைவதும் தவிர்க்க முடியாதவையாகவே இருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 23-09-91 | ,, | 7-00 | மந்துவில் சிறிகாந்தன் ச. ச. நிலையம் |
| 24-09-91 | ,, | 8-00 | பளை சிற்றாரச வ மைதானம் |
| 25-09-91 | ,, | 8-00 | நாவற்குழி மகாவித்தியாலயம் |

தென்மராட்சியில் நடைபெறும் சகல கூட்டங்களிலும், திலீபன் வாழ்க்கை வரலாறுபற்றிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

### வன்னி மாவட்டத்தில்

## தியாகி திலீபன் தடகள விளையாட்டுப் போட்டிகள்

(வவுனியா)

தியாகி திலீபன் ஞாபக தடகள விளையாட்டுப் போட்டிகள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் வவுனியா மாவட்டத்தில் நடாத்தப்பட்டு வருகிறது.

கடந்த பதினைந்தாம் திகதி கற்சிலைமடு பண்டாரவன்னியன் சிலையடியில் சைக்கிளோட்டப் போட்டி நடைபெற்றது. நேற்று முன்தினம் பதினாறாம் திகதி ஓட்டுசுட்டான் வித்தியானந்தா கல்லூரியில் காலை ஒன்பதுமணிக்குவலைப் பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

நேற்றுக் காலை ஆறு மணிக்கு தண்ணீரூற்றில் ஆரம்பமாகிய துவிச்சக்கரவண்டிப் போட்டி, மாங்குளம், பரந்தன், புதுக்குடியிருப்பு வரை சென்று அங்கேமுடிவடைந்தது.

இன்று காலை ஆறு மணிக்கு நெடுங்கேணியில் மரதன் ஓட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நடைபெற உள்ளது.

நாளை 19ஆம் திகதி ஊஞ்சுவானம்பேட்டையில் ஆரம்பமாகும் பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டம் தண்ணீரூற்றுக்கு வந்து சேரும். தொடர்ந்து முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தடைதடை போட்டியும் ஆரம்பமாகும்.

இருபதாம் திகதி மாலை தடை தடை இறுதிப் போட்டிகள் இதே கல்லூரியில் நடைபெற உள்ளன.

## அநுராதபுர வர்த்தகர் நீதிமன்றத்தில் ஆஜர்

(வவுனியா)

தடை செய்யப்பட்ட பொருள்களை வடக்கிற்குக் கடத்தியதற்காகக் கைதுசெய்யப்பட்ட அநுராதபுரம் வர்த்தகரின் நான்கு லொறிகள், இரண்டு பஜரோக்கள், ஒரு மினிபஸ், கார், ஒவ்வொன்றும் 45 கலன் எரிபொருள் நிரப்பிய 48 கொள்கலன்கள் ஆகியன கடந்த வியாழனன்று அநுராதபுர நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டன. இவற்றை இராணுவப் பொலிஸ் கப்டன் பொன்சேகா அநுராதபுர மாவட்ட நீதிபதி ஹெரல்ட் லியனகே முன்னிலையில்ஆஜர்செய்தார்

இந்த வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபரான அநுராதபுர வர்த்தகர் பியதிலக்க அநுராதபுர தனியார்பஸ்போக்குவரத்துச் சங்கத்தின் தலைவராவர். தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கடத்திவருவதற்காக இவருடன் சிலர் இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டனர்.

பியதிலக்கா உட்பட மற்றும் இராணுவத்தினரும் இராணுவத்தினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பொருள்களை மாத்திரம் நீதிமன்றம் பொறுப்பேற்றது.

டன் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் மற்றும் ஐந்து உறுப்பினர்களும் இது பற்றிக் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கும் பதிலளித்துப் பேசும்போது நெடுஞ்செழியன் இவ்வாறு தெரிவித்தார்.

நிலைமையைத் தொடர்ந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஆறு முறை பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசியதாகவும் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

பொலிஸாரின் விசாரணைக்குப் பிறகு சம்பந்தப்பட்டவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் நெடுஞ்செழியன் கூறினார்.

### நுகேகொடைக்

## கூட்டத்தின் தாக்கம் தெரியத் தொடங்கி விட்டது

(கொழும்பு)

நுகேகொடையில் நடத்திய மாபெரும் பொதுக் கூட்டம் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கி விட்டது. அலரி மாளிகையில் நடந்த ஒரு கூட்டத்தில் அரசாங்க தரப்பினர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், எம். பீக்கள் பலரும் துணிச்சலாக கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் என லலித் அத்துலத் முதலி கூறினார். லலித் அத்துலத் முதலியின் இல்லத்தில் கடந்த வெள்ளி பிற்பகல் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் காமினி திஸாநாயக்காவும் இந்தச் சந்திப்பின் போது இருந்தார்.

தொடர்ந்து கூறிய லலித் "எமக்கு எதிராக ஒட்டப்பட்ட போஸ்டர்கள் எமக்கு பெருமளவில் உதவுகின்றன. புலிகளின் தொடர்பு, லொஸினோ ஆகியவை பற்றிய உண்மைகளை நாம் வெளியிடுகின்றோம். மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். புலிகளுக்கு ஆயுதம் வழங்கியது தொடர்பாக அரசு ஏன் தான் மௌனம் சாதிக்கிறதோ தெரியாது" என்று குறிப்பிட்டார்.

காமினி திஸநாயக்கா குறிப்பிடும் போது "வடக்கில் தமிழீழ புலிகளுக்கு எதிராக யுத்தம் நடக்கும் போது உட்பூசல்களை உங்களுக்குள் தீர்த்துக் கொள்ளுங்கள்" என மகாநாயகதேரோ ஆலோசனை கூறினார். அதற்கு நாம் உடன் பட்டோம். சமாதான தீர்வுக்கு நாம் தயார். அதற்கேற்ப சகலதையும் செய்கிறோம் என நான் பதில் அளித்தேன்.

அதே நேரம் மல்வத்தை பீட செயலாளர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை எதிர்த்து பிரசாரம் செய்திருப்பதாகவும்-

மகா சங்கத்தினர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை எதிர்த்து பிரசாரம் செய்ய புறப்பட்டு விட்டார்கள் என்றும் காமினி தெரிவித்தார்.

**தியாகத்துளி - 4**

**சூரியன்**

நித்திரையின்றி<br>
நீ புரண்டாய் - உன்<br>
பக்கத்தில்...<br>
நனிந்து<br>
இத்தரையின்<br>
விடியலுக்காய்<br>
தேய்கின்ற சூரியனைப்<br>
பார்த்திருந்தேன்!

வாஞ்சிநாதன்

# கலை, பண்பாட்டு கழகத்தில் 3 நாள் கலந்துரையாடல்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலகத்தில் இன்றும், நாளையும், நாளை மறுதினமுமாக மூன்று நாள் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.

கோண்டாவிலில் உள்ள கலை பண்பாட்டுக் கழக கேட்போர் கூடத்தில் இன்று புதன் கிழமை மாலை 3-00 மணிக்கு தமிழீழ நாடகக் கல்லூரி அமைப்பது பற்றியும், நாளை வியாழக்கிழமை 3-00 மணிக்கு தமிழீழ ஓவிய சிற்பக் கல்லூரி உருவாக்குதல் பற்றியும், வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு தனித்தமிழை வழக்கத்திற்குக் கொண்டு வருதல் பற்றியும் கலந்துரையாடல்கள் அமர்வுகளாக அமையும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடல்களுக்கு அவ்வத் துறைசார்ந்த அறிஞர்களையும், ஆர்வலர்களையும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறு கருத்துக்களைத் தருமாறு அழைக்கப்படுகின்றனர்.

# பூநகரி கோட்டை அருகில் மாவீரர்கள் உருவப்படம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கோட்டை இராணுவ முகாமை தகர்க்கும் தாக்குதலின்போது 1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த மாவீரர்களின் உருவப்படங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை மேற்படி கோட்டைக் கருகாமையில் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

மேஜர் அசோக், இரண்டாம் லெப். ரகு, செந்தூரன் லெப். அலிபா, லெப். சேகர், தம்பா, லெப். துரை மணி ஆகியோரின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தை ஒட்டி கலை நிகழ்ச்சிகளும், விளையாட்டுப் போட்டிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சிகளில் பூநகரி, முழங்காவில் அரசியல் பொறுப்பாளர் திரு ரமேஸ், மற்றும் திரு. சபேசன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர். (71)

# தியாகி திலீபன் 4ஆம் ஆண்டு நினைவாக பாரிய சிரமதானங்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டி யாழ். குடாநாடெங்கும் பாரிய சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி ஆகிய பகுதிகளில் பல்வேறு சிரமதான வேலைகள் ஒழுங்கு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வேலைகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் உள்ள வீதிகள், பொதுஇடங்கள் மற்றும் குளங்கள், வாய்க்கால்கள் போன்றவை புனரமைப்புச்செய்யப்பட்டுவருகின்றன. இவ்வேலைகளுக்கு அவ்வப்பகுதியிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. (க)

# திரையரங்கு உரிமையாளர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சகல திரைப்பட அரங்கு, வீடியோபட அரங்கு உரிமையாளர்களையும் முகாமையாளர்களையும் நாளை வியாழக்கிழமை (19-9-91) காலை 10-00 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு நிதர்சனம் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

# ராணுவத்தால் தடுத்துவைத்த 22 பேர் நாளை விடுதலை

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் சிறிலங்கா இராணுவ சுற்றி வளைப்பில் சிக்கியுள்ளவர்களில் இருபத்திரண்டு பேர் நாளை வியாழக்கிழமை மாலை விடுதலை செய்யப்படவுள்ளனர்.

கடந்த வருடம் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவம் அதனைச் சூழவுள்ள கட்டுவன், மாவிட்டபுரம் கீரிமலை பகுதிகளை சுற்றி வளைத்து முகாமிட்டதும்,

இந்த நடவடிக்கைகளின் போது காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டிப் பகுதியில் குடியிருந்த நூற்றுக்கணக்கானோர் வெளியேற முடியாது இராணுவப்பிடிக்குள் பணயக்கைதிகளாக்கப்பட்டதும் தெரிந்ததே.

கடந்த சில மாதங்களின் முன் இங்கு சிக்கியவர்களில் இருபத்திமூன்று பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விடுதலை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே

தற்போது நாளை மாலை அங்கு பணயம் வைக்கப்பட்டுள்ளோரில் பதின் நான்கு வயது சிறுவன் ஒருவரும் நாற்பது வயதுக்கு மேற்பட்ட இருபத்தொருபேரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விடுதலை செய்யப்படவுள்ளனர். இதுபற்றிய விபரங்கள் விடுதலை செய்யப்படுவோரின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது (ச)

# செஞ்சிலுவைக் குடிசைகள் வசிப்பதற்கு ஏற்ற நல்ல

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களுக்கென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் அராலியில் அமைக்கப்பட்ட குடிசைகள் மக்களின் பாவனைக்கு ஏற்றவை அல்ல என்று இடம் பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலத்தின் போது தாராளமாக மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய இடத்தைத் தேர்ந்தெடுத்து இக் குடிசைகள் அமைக்கப்பட்டிருப்பதால் இக் காலப் பகுதியில் தாம் அங்கு வாழ முடியாது என்றும் மழை காலத்தின் போது தாம்மீண்டும் இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

போதிய திட்டமிடல் இன்றி மேற்கொள்ளப்பட்ட மேற்படி முயற்சியை உடனடியாக மீள் பரிசீலனை செய்யும்படி பல இடம்பெயர்ந்த மக்கள் செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க)

## பாராளுமன்றை

தாசா அனுப்பிவைத்திருக்கும் கடிதம் ஒன்றில் பாராளுமன்றத்தைக் கலைப்பதாக தனது உரிமைகளை எவரும் தடுத்து நிறுத்தி வைக்க முடியாது என்று உறுதிபட எழுதியுள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரினால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாட்டை தாம் ஏற்று நடக்கப் போவதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார்

சென்ற சனிக்கிழமை சபாநாயகர் எழுதியிருந்த கடிதத்திற்கு எழுதப்பட்ட பதில் தான் ஜனாதிபதியின் மேற்படி கடிதமாகும்.

குற்றச்சாட்டு மனு அரசியல் யாப்பு சரத்துக்களின் அனைத்தையுமே நிறைவு செய்கிறபடியால் அந்த மனுவைத் தான் சபையில் விவாதத்திற்கு அனுமதித்து விட்டதாக சபாநாயகர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அழுத்தம் திருத்தமாக குறிப்

# கண்காணிப்புக் குழுக்கள்

(சென்னை)

சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள சுமார் இருபது கடலோரக் கிராமங்களில் மீனவர்களிடையே கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார் வளைகுடாப் பகுதியிலிருந்து நடக்கும் ஊடுருவல்களைத் தடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இக் கண்காணிப்புக் குழுக்

# தியாகி திலீபன் நினைவு எழுச்சி ஊர்தி பவனி

திலீபனின் 4ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு தியாகி திலீபனின் உருவப் படத்தை தாங்கிய போர்க்கால வடிவங்களை சித்தரிக்கும் எழுச்சி ஊர்தி யாழ். மாவட்டத்தில் தற்பொழுது பவனி வந்து கொண்டிருக்கின்றது மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவினரால் ஒழுங்கமைக்கப்பட்ட இவ்வூர்தியில் போர்க்கால கலைநிகழ்வுகளும் திலீபன் நினைவு எழுச்சி கலை நிகழ்வுகளும் நடைபெறுகின்றன தற்பொழுது இவ்வூர்தி வலிகாமப் பகுதியில் பவனி வருகின்றது.

# தி. மு. கழகம் மீதான குற்றச்சாட்டு அர்த்தமற்றது - ஆலடி அருணா

(சென்னை)

சென்னையில் முப்பெரும் விழாவையொட்டி திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய ஊர்வலத்தில் வந்தவர்களே கற்களை வீசி கலவரம் செய்ததாக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ் சாட்டியிருப்பதும், அதற்கு அமைச்சர் அளித்த பதிலும் ஆதாரமற்றது என்றும் தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வினர் எந்தவித கலவரத்தையும் செய்யவில்லை என்றும் மாநிலக் கட்சியினரே வன்முறையில் இறங்கிவிட்டு, பழியை தி.மு.க. மீது போடுகிறது என்றும், ஆலடி அருணா தெரிவித்தார்.

# பிரிவினைவாதிகளை ஒதுக்கிவிட நடவடிக்கை - ஜெயலலிதா

தமிழகத்திலிலுள்ள பிரி

வருகின்றன

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி ஆகிய பகுதிகளில் பல்வேறு சிரமதான வேலைகள் ஒழுங்கு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வேலைகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் ...புச் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வேலைகளுக்கு அவ்வப்பகுதியிலுள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. (க)

யல் யாப்பு சரத்துக்கள் அனைத்தையுமே நிறைவு செய்கிறபடியால் அந்த மனுவைத் தான் சபையில் விவாதத்திற்கு அனுமதித்து விட்டதாக சபாநாயகர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பிரச்சினை குறித்து ஆலோசனை கலப்பதற்காக யு. என் பி, பாராளுமன்றக் குழு இன்று கூடுகிறது

லோரக் கிராமங்களில் மீனவர்களிடையே கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார் வளைகுடாப் பகுதியிலிருந்து நடக்கும் ஊடுருவல்களைத் தடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியுள்ளார்.

...லும் ஆதாரமற்றது என்றும் ...மது பொருத்தமற்றது என்றும், ஆலடி அருணா தெரிவித்தார்.

## நிபந்தனையற்ற பேச்சிற்கு

# பிரிட்டிஷ் கமன்ஸ் சபை உறுப்பினர்கள் கோரிக்கை

(லண்டன்)

சிங்களவர்-தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணவும், கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் உடனடியாக இரு தரப்பினரும் சமமாகக் கலந்து கொள்ளும் நிபந்தனை எதுவுமற்ற பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை விவாதிக்க பிரித்தானிய கமன்ஸ் சபையில் ஆறு எம். பிக்கள் கூட்டாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

கலாநிதி எலிஸ் தோமஸ், கலாநிதி நோமன் ஏ. குட்மான், தொமஸ் கிறஹாம், செயித் பிறாட்லி, அலன் மீல் ஹரி பார்ணஸ் ஆகிய ஆறு எம் பிக்களே இந்த முன்னறிவித்தலைக் கொடுத்துள்ளனர்

### பிறர்

அவர், சிலரின் சொந்த நலன்களுக்கு எதிராக நான் நடவடிக்கை மேற்கொண்டதனால் ஒட்டாண்டியான எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன் சேர்ந்து என்மீது பழிவாங்கப் பார்க்கிறார்கள். இவர்களுக்குப் பின்னால் அக்கறையுள்ள வெளிநாட்டுச் சக்தியின் கையும் இருககிறது என்றார்.

இந்தத் துரோகிகள் அணியில் சமாதானம் என்ற போர்வையில் நிலத்தைக் கையாடியவர்களும் உள்ளனர், அகதிகளுக்கு உதவி என்ற பெயரில் சிங்கப்பூரில் இருந்து கடத்தல் பொருள்களைக் கொண்டு வந்த ஒருவரும் இந்த அணியில் உள்ளார். மற்றும் ஒரு கள்ளன் யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களைக் கடத்தி புலிகளுக்கு உதவியுள்ளார் என்றும், இன்னுமொருவர் தேயிலை வியாபாரமோசடியில் கையை நனைத்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

### அரசியல்

சாமான்ய மக்கள் அவரிடம் சோதிடம் கணிக்கச் சென்றால் எதற்கும் இந்தமாதம் 24ஆம் திகதிக்கு பின் வாருங்கள் என்று நுழைவாயிலில் நிற்கும் காவலாளி கூறி திருப்பி அனுப்பிவைககிறார்.

தற்போது அரசியல் வாதிகள் அவரிடம் சோதிடம் கணிக்கச் செல்வதால் இந்த நெருக்கடி நிலை என்று தெரிவிக்கப்படுகிறது.

### அன்னை பூபதி

பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். பரிசுகளைப் பெறும் மாணவர்கள் ஆர்வத்தோடு இவ்விழாவில் நேரில் பங்கு கொண்டு பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கோரியுள்ளது. அவ்வக் கோத்தணி அதிபர்கள் பாடசாலை அதிபர்கள் பரிசுபெறும் மாணவர்களை பரிசளிப்பு விழாவிற்கு அழைத்து வர உதவிகள் புரியுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

### எவரின்

பேசிய அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது:-

இங்கிலாந்தில் இதுபோன்ற ஒரு சம்பவம் முன்னதாக நடந்தது யேம்ஸ் மன்னன் ஒரு சம்பவம் தொடர்பாக சபாநாயகரிடம் செல்வாக்கைப் பாவிக்க முயற்சித்துள்ளார். எனக்குக் கண்களும், காதுகளும் உண்டு. எனது பாராளுமன்றத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும் என்று மன்னனுக்குப் பதில் அளித்ததோடு, பாராளுமன்றத்தில்இவ்வகைவிடயங்களில் தலையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டார்.

இதே போன்று சிறிலங்காவின் சபாநாயகரும் நடந்து கொள்வார். அவர் பிரச்சினையின் தன்மையை அறிந்து கொண்டு செயற்படுவார். மற்றவர்கள் தலையீடு தேவைப்படாது என்றார் பிரேமச்சந்திரா.

பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அத்துலத்முதலி, சபாநாயகருக்கு சட்டமா அதிபர் வழங்கியதாகச் சொல்லப்படும் ஆலோசனை ஒரு வழக்கறிஞர் வழக்காளிக்கு வழங்கும் சட்டவாலோசனை போன்றதாகும். அதை விட, அதற்குமேல் வேறொன்றுமில்லை என்றார் அவர்.

### மாவீரருக்கு

தொடுவாய் மாலினி-முள்ளியவளை, நெல்சன்- குமுளமுனை ஆகியோருக்கு ஆயிரக்கணக்கானமக்கள்முள்ளியவளையில் அஞ்சலி செலுத்தினர்.

இவர்களது புகலுடல்கள் முள்ளியவளை மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

### ராணுவம்

இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. ஆனால் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை இதைவிட அதிகமென சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன.

### சபாநாயகரின்

யான- வெளித்தெரியக் கூடிய நடவடிக்கை ஒன்றை எடுத்திருந்தால் மட்டுமே அரசியல் யாப்பின் விதிமுறைகளுக்கு அமைய ஏற்றுக் கொள்ளப்பட்டது எனப் பொருள் கொள்ளப்படலாம் என்று சட்டமா அதிபர் கூறியுள்ளார். அரசியல் யாப்பின் 70 (1)ஆம் பிரிவில் காணப்படும் ஏற்றுக் கொள்ளுதல் என்னும் பதம் அறியக்கூடிய விதத்திலும் உறுதியாகவும் உத்தியோக பூர்வமாகவும் வெளிப்படையாக எடுத்த நடவடிக்கை ஒன்றைக் குறிக்குமேயன்றி சபாநாயகரின் மனதிலுள்ள அபிப்பிராயத்தைக் குறிப்பதாகாது. ஜனாதிபதி பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்த நேரத்தில் முறைப்படியாகக் குற்றப் பிரேரணை மனுபாராளுமன்றத்தில் சேர்ப்பிக்கப்படாமை காரணமாக அது அடுத்த பாராளுமன்றக் கூட்டத் தொடரின்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படலாகாது என்பது சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனை மூலம் ஊர்ஜிதமாகியுள்ளது. எவ்வாறாயினும் சட்டமாஅதிபர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கினாரேயன்றி சபாநாயகருக்கு அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிவினைவாதிகளை ஒதுக்கிவிட நடவடிக்கை

- ஜெயலலிதா

தமிழகத்திலிலுள்ள பிரிவினை வாதிகளைகண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தி ஒடுக்கிட, தமது அரசு எல்லா வகையிலும் முயலும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்

அறிஞர் அண்ணாவின் 83-வது பிறந்த நாளை கொண்டாடும் முகமாக ஏற்பாடு செய்திருந்த விழாவொன்றில் கலந்து கொண்டு பேசிய செல்வி ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் விருப்பத்திற்கிணங்க மத்திய அரசின் கரங்களை தமிழக அரசு வலுப்படுத்தும் என்றும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாத்துரை இந்திய தேசிய ஒருமைப்பாட்டில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததால்தான் தனித் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டார் என்றும் ஜெயலலிதா தனது உரையில் குறிப்பிட்டார்.

## பதினாறில் பத்து

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல்பீடத்தின் இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன. அம்பிகைபாலன், அருளானந்தன், பாலகிருஷ்ணன், கிருபாகரன், குமரேசன், கே. பிரபாகரன், எஸ். பிரபாகரன், ரவீந்திரன், ரவிசங்கர், சிறிரங்கநாதன் ஆகியோர் முதல் தரத்தில் சித்திபெற்ற பதினாறு பேரில் அடங்குகின்றனர் இரண்டாம் தரத்தில் சித்திபெற்ற ஒன்பது பேரில் கே அருள்நந்தி, எம். கிருஷ்ணகுமார், என் முருகானந்தன், பி. நிரஞ்சன், செல்வி ரதினாம்பிகை, டி சரவணபவான் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

### ஓமந்தை

வ. சண்முகலிங்கம் (47) ஏழாலை தெற்குமயிலங்காடு, எஸ் கதிரமலை செட்டித்தெரு நல்லூர், ஆனந்த நடராஜா (30) சுன்னாகம், கலியுகவரதன் (20) அல்வாய் மேற்கு, ரவீந்திரன் (29) பருத்தித்துறை சின்னத்தம்பி அமிர்தலிங்கம் (42) அரசடி தொண்டமானாறு, மகாலிங்கம் றோசம்மா (38) கணேசபுரம் வவுனியா, அன்னராசா செல்வலட்சுமி (38) சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு, ஆறுமுகம் ராஜேஸ்வரி சாஸ்திரி கூழாங்குளம் வவுனியா, சண்முகம்பேரின்பம்பருத்தித்துறை இவர்களுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் பலர் கட்டடத்தின் ஓடு, செங்கல் போன்றவை விழுந்தே காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## ‘குமாரி’ வந்தது

மோர்ஸ் குமாரி என்ற சரக்குக் கப்பல் நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தது. கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களும், மற்றும் தபால் பொதிகளும் இந்தக் கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டியல் சரிபார்க்கப்படும் வரைபொருள்களின்வகை தொகை பற்றிய விபரங்களை வெளியிட யாழ். செயலக வட்டாரங்கள் மறுத்துள்ளன.

### அதிவேக

வும் இதற்காக இந்த ஆண்டு மத்திய அரசு இருநூறுகோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும். அவர் தெரிவித்தார்.

### இன்று

துறை இறங்குதுறையை வந்தடைந்த குமாரி கப்பலில கொண்டு வரப்பட்ட தபால் பொதிகளே இன்று தரம்பிரிக்கப்பட்டு யாழ் குடாநாட்டிற்குள் விநியோகிக்கப்படவுள்ளன. ஏனைய பகுதிகளுக்கு நாளை விநியோகிக்கப் படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.